


**30. 10. 2025**

தலைப்புச்செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி, குஜராத் மாநிலத்தில் ஆயிரத்து 140 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. பழம் பெரும் கடல் சிறப்புகளை நாம் மீண்டும் எட்ட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

3. பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118-வது பிறந்தநாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அன்னாரது நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்தினார்.

4. தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

5. உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் அரையிறுதியில் இந்தியா - ஆஸ்திரேலியாவை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

***************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி, குஜராத் மாநிலம் கேவாடியாவில் ஆயிரத்து 140 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுவதோடு, முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கி வைக்கிறார்.

25 மின்சார பேருந்து சேவைகளும் இதில் அடங்கும்.

இரண்டு நாள் பயணமாக குஜராத் செல்லும் பிரதமர், சர்தார் வல்லவாய் பட்டேலின் பிறந்தநாளையொட்டி, தேசிய ஒற்றுமை தின கொண்டாட்டங்களில் நாளை பங்கேற்க உள்ளார்.

இந்நிகழ்வில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்கிறார்.

பாட்னாவில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த திரு. அமித் ஷா குடியரசு தின விழாவின்போது நடைபெறும் அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு இணையாக தேசிய ஒற்றுமை ஓட்டத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதிலுமிருந்து மத்திய துணை ராணுவப்படையினர் பல்வேறு மாநிலங்களின் காவல் துறையினர் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்க இருப்பதாக அவர் கூறினார்.

***************

பீஹார்

பீஹார் மாநிலத்தில் 18 மாவட்டங்களிலுள்ள 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 6-ம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவை ஒட்டி அரசியல் கட்சி தலைவர்களின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி முஸாஃபர் பூர், சப்ரா பகுதிகளில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொண்டார்.

காங்கிரஸ் கட்சியின் திரு.ராகுல்காந்தி பார்பிகா நூற்சராய் பகுதிகளில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

***************

மாண்டவியா

வளர்ச்சி அடைந்த பாரதத்தின், கடல்சார் மேம்பாட்டு பாதைக்கான இலக்கை எட்ட, பழமையான கடல் சிறப்புகளை நாம் மீண்டும் அடைய வேண்டியதன் அவசியத்தை மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தினார்.

மும்பையில் கடல்சார் வார நிகழ்வை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், கப்பல் கட்டமைப்பிலும், கடல்சார்ந்த திறன் மேம்பாட்டிலும், இந்தியா, பண்டைய காலங்களில் அறிவுபுலமையோடு செயலற்றியதை சுட்டிக்காட்டினார்.

வாஸ்கோடகாமாவின் இந்திய வருகைக்கு முன்னதாகவே நம் நாட்டின் வணிகர்கள், விரிவான வாணிப கடல்

பாதைகளை உலகம் முழுவதும் கண்டறிந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக கடல்சார் பிரிவுகளில் சிறப்பபாக செயலாற்றிய மகளிருக்கு அமைச்சர் விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

***************

ராஜ்நாத்சிங்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் மலேசியாவில் நடைபெற உள்ள ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

இதற்காக இரண்டு நாள் அரசு முறை பயணமாக மலேசியா செல்லும் அவர், ஆசியான் உறுப்பினர் நாடுகளுடன் பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

மலேசிய நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு கூட்டத்திலும் அவர் கலந்துகொள்கிறார்.

***************

திரைப்பட விழா

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் 56ஆவது சர்வதேச திரைப்பட விழா அடுத்த மாதம் 20ஆம் தேதிமுதல் 28ஆம் தேதிவரை கோவாவில் நடைபெறுகிறது.

இத்திருவிழாவில் பங்கேற்க விரும்புவோர் அதற்கான இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதிலுமிருந்து பிரபல திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், திரைப்பட துறையை சேர்ந்த வல்லுநர்கள், பங்கேற்கின்றனர்.

திரைப்பட ஆய்வு மற்றும் மதிப்பீடு குறித்த விவாதங்கள், இதில் இடம்பெறுகின்றன.

***************

ட்ரம்ப்

சீனாவும் – அமெரிக்காவும் ஒருசேர வளர்ச்சி அடைந்தால், இருநாடுகளுக்கும் அது பயனுள்ளதாக அமையும் என்று சீன அதிபர் திரு. ஸீ ஜின் பிங் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் நடைபெறும் 32ஆவது ஆசிய பசிஃபிக் தலைவர்களின் பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், அமெரிக்காவின் வளர்ச்சிக்காக அதிபர் ட்ரம்ப் முனைப்புடன் செயலாற்றி வருவதாக கூறினார்.

இருநாடுகளும் இணைந்து வளர்ச்சியை முன்னெடுத்து செல்லும் வகையில் அதிபர் ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் சீன அதிபர் குறிப்பிட்டார்.

***************

ராக்கெட்

ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM3- M5 ராக்கெட் மூலம் CMS-03 தொலைதொடர்பு செயற்கைகோள் வரும் 2ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

4 ஆயிரத்து 400 கிலோ எடை கொண்ட கனரக செயற்கைகோள் முதல்முறையாக இந்தியாவிலிருந்து அனுப்பப்படுகிறது.

ஸ்ரீஹரிகோட்டாவின், முதல்ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து, விண்ணில் ஏவ இந்த செயற்கைகோள் செலுத்துவாகனம் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மீனவர்கள் அன்றையதினம் கடலுக்கு செல்ல மாநில மீன்வளத்துறை தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

பசும்பொன்

சுதந்திர போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118-வது பிறந்தநாள் மற்றும் 63-வது குருபூஜை விழாவையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அன்னாரது நினைவிடத்தில், குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து சமுதாயத்தினரையும் அரவணைத்து சென்றவர் முத்துராமலிங்க தேவர் என புகழாரம் சூட்டினார்.

குடியரசு துணைத்தலைவராக பதவியேற்ற பின் முதன்முறையாக, இவ்விழாவில் பங்கேற்க தமிழகம் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட சமூக வலைதள பதிவில், நீதி, சமத்துவம், ஏழைகள், விவசாயிகள் நலனில் அன்னாரது அர்ப்பணிப்பு அடுத்த தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமது சமூக வலைதள பதிவில், சுதந்திர போராட்டத்தின்போது தமிழகத்திலிருந்து பெரும் படையை திரட்டிய பெருமைக்குரியவர் என குறிப்பிட்டுள்ளார்.

ஏழை எளிய மக்களின் நலனுக்காக போராடியவர் என்றும் கூறியுள்ளார்.

பசும்பொன்னில் அன்னாரது நினைவிடத்தில், மரியாதை செலுத்திய பின் பேசிய முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், பசும்பொன்னில், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேவர் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

நாட்டின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்தவர் முத்துராமலிங்க தேவர் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மாநில அமைச்சர்கள், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி உள்ளிட்டோரும் பசும்பொன்னில் அன்னாரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

முன்னதாக முதலமைச்சர் மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் சிலைக்கும், தெப்பக்குளம் பகுதியில் உள்ள மருதுபாண்டியர்

சகோதாரர்கள் சிலைகளுக்கும் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

***************

அர்ச்சனா பட்நாயக்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் சீர்திருத்த பட்டியல் தொடர்பான விவரங்களை அவர் எடுத்துரைத்தார்.

இதுதொடர்பான பயிற்சியை வழங்குவதற்கான ஆலோசனைகளையும் அவர் மேற்கொண்டார்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அவர் ஆலோசனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

***************

அரக்கோணம்

அரக்கோணத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையினருக்கு ஃபிட் இண்டியா இயக்கத்தின் சார்பில் உடல் ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் செயல்பட்டு வரும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஃபிட் இண்டியா இயக்கத்தின் சார்பில் 10 கிலோ மீட்டர் நீள பேரணியில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியை பேரிடர் மீட்பு படையின் துணை கமாண்டர் வைத்தியலிங்கம் தொடங்கிவைத்தார்.

***************

தென்காசி அணை

தென்காசி மாவட்டம் அடவிநயினார் அணை நடப்பாண்டு நான்காவது முறையாக, முழுகொள்ளளவை எட்டியுள்ளது.

இதனை தொடர்ந்து விவசாயிகள் பிசான சாகுபடி பணியை முழுவீச்சில் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

கோவை - இபாஸ்

கோவை மாவட்டம் வால்பாறைக்கு செல்ல இ-பாஸ் நடைமுறை நாளை மறுநாள் முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் அறிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிகள் ஆழியாறு சோதனை சாவடியில் இ-பாஸ் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பிரதமரின் மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழ் பயன்பெறவிரும்புவோர் விழுப்புரம் மீன்வள உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம் என ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

***************

கிரிக்கெட்

உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் அரையிறுதியில் நவி மும்பையில் இன்றுபிற்பகல் 3 மணிக்கு இந்தியா - ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி வரும் 2ஆம் தேதி நடைபெறும் இறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்ளும்.

***************

பேட்மிண்டன்

ஜெர்மனியில் நடைபெறும் ஹைலோ ஓப்பன் பேட்மிண்டன் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் லக்ஷயா சென், கிரண் ஜார்ஜ், ஆயுஷ் ஷெட்டி, உன்னாட்டி ஹூடா உள்ளிட்டோர் இன்று களமிறங்குகின்றனர்.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது